www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 12

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022 -23

## தமிழ்

நேரம் : 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "சிவந்து, செந்தமிழ், வியர்வை வெள்ளம்" என்னும் சொற்கள் உணர்த்தும் இலக்கணக் குறிப்புகள்

அ) பண்புத்தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை ஆ) வினைத்தொகை, பண்புத்தொகை, உருவகம்

இ) வினையெச்சம், பண்புத்தொகை, சொல்லிசை அளபெடை

ஈ) வினையெச்சம், பண்புத்தொகை, உருவகம்

2. கருத்து 1 : வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் – மணல் அள்ளுதல்

கருத்து 2 : நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது – மழைமேகங்கள்

அ) கருத்து 1 தவறு 2 சரி ஆ) கருத்து இரண்டும் சரி

இ) கருத்து 1 சரி 2 தவறு ஈ) கருத்து இரண்டும் தவறு

3. "புகலரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தாள் நுந்தை" – இத்தொடரில் "நுந்தை" என்பது யாரைக் குறிக்கும்?

அ) சடாயு ஆ) தயரதன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன்

4. வையகமும் வானகமும் ஆற்றல் அரிது – எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

5. சாலை போக்குவரத்து உதவி தொலைப்பேசி எண்

அ) 108 ஆ) 103 இ) 100 ஈ) 101

6. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்

அ) வேளாண்மை ஆ) இலக்கியம் இ) புவியியல் ஈ) கணிதம்

7. அகநானூறு மணிமிடைப் பவளத்தில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை

அ) 180 ஆ) 120 இ) 100 ஈ) 200

8. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) ஆமந்திரிகை | – | 1) | பட்டத்து யானை |
| ஆ) அரச உவா | – | 2) | மூங்கில் |
| இ) கழஞ்சு | – | 3) | இடக்கை வாத்தியம் |
| ஈ) கழை | – | 4) | எடையளவு |

அ) 3421 ஆ) 3142 இ) 2341 ஈ) 4321



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

9. கல்வெட்டு ஆய்வுக்காக ஐராவதம் மகாதேவன் பெற்ற விருது

அ) செவாலியர் விருது ஆ) சாகித்திய அகாடமி விருது

இ) கல்வெட்டு ஆய்வு விருது ஈ) ஜவஹர்லால் நேரு ஆய்வறிஞர் விருது

10. "தொன்மைதானே சொல்லும் காலை, உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" – என்று தொன்மைக்கு இலக்கணம் வகுத்தவர்.

அ) இளம்பூரணர் ஆ) தொல்காப்பியர் இ) பேராசிரியர் ஈ) நச்சனார்க்கினியர்

11. "DEMAND DRAFT, RUBBER STAMP" – கலைச் சொல்லாக்கம் தருக.

அ) பற்று அட்டை, மை பொதி முத்திரை ஆ) விரைவு வரைவோலை, அழியா முத்திரை

இ) பணம் எடுக்கும் சீட்டு, நிலமை முத்திரை ஈ) கேட்பு வரைவோலை, இழுவை முத்திரை

12. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) தனித்தமிழ் தந்தை – மு. வரதராசனார்

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் – மயிலை சீனி. வேங்கடசாமி

இ) தமிழ்த் தென்றல் – திரு. வி. க

ஈ) மொழி ஞாயிறு – தேவநேயப் பாவாணர்

13. கடையேழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

14. நாம் முயற்சி செய்வோம் – என்பது

அ) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆ) உயர்திணை தன்மைப் பன்மை

இ) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஈ) உயர்வானத் தன்மைப் பன்மை

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. வறுமையும் சிறுமையும் தருவது எது?

16. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் யாருக்கு?

17. நெடுநல்வாடை – குறிப்பு வரைக.

18. முகம் முகவரியாற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

20. கலைப்படங்கள் – விளக்கம் தருக.

21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) முருகன் பழம் உண்டு சோறு தின்று பால் குடித்துப் படுத்தான்.

ஆ) வனவிலங்கு நிலையத்தில் சிங்கக்குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

23. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

24. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) கலை, களை, கழை ஆ) கான், காண்

25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

26. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக்குக.

அ) நெலத்த கௌறணும்டா அப்பதான் வகுறு நெறையும்

ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்திக்குனு போனாரு.

28. புணர்ச்சி விதி கூறுக. அ) உள்ளொன்று ஆ) அருங்கானம்

29. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) தந்தனன் ஆ) பகைத்த

30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது

ஆ) மானம் பாற்த்த பூமியில் பயிறு வகைகல் பயிரிடப்படுகின்றன.

## பகுதி – III

### பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. தன்னேரிலாத தமிழின் சிறப்புகள் யாவை?

32. கந்தகோட்டத்து இறைவனிடம் வள்ளலார் வேண்டுவனவற்றை வரிசைப்படுத்துக.

33. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

34. செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. கதைப்பாடல்கள் பட்டியலிடும் மாணவர்களுக்குக் கற்பித்த நூல்களை எழுதுக.

36. "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" – நூல் குறித்து மயிலை சீனி. வேங்கடசாமி கூறும் விளக்கம் யாது?

37. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

38. மணந்தகம், குலஷோங் விளைவு – விளக்குக.

### பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. வெண்பாவின் பொது இலக்கணம் மற்றும் அதன் வகைகளை எழுதுக.

40. கீழ்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தோடு ஏற்புடைய நயங்கள் நான்கினை எழுதுக.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே!

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

41. ஏகதேச உருவக அணி (அல்லது) சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.

42. பழமொழியை விளக்கி வாழ்க்கை நிகழ்வோடு பொருந்தி எழுதுக.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (அல்லது) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்

43. ஏதேனும் ஒன்றனுக்குச் சொந்த கற்பனையில் கவிதை புனைக.

மழைநீர் சேகரிப்பு (அல்லது) உழைப்பே உயர்வு

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

44. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவினைக் கம்பர் நிறுவுக.

(அல்லது)

அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

45. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

நிருவாக மேலாண்மை குறித்த வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. பாதுகாப்பாய் பயணம் அமைய அனைவரும் அறிந்திருக்க வேண்டிய சாலை விதிகள் மற்றும் வாகனச்சட்டங்களை தொகுத்து எழுதுக.

(அல்லது)

கோடை மழை வாயிலாக அறியலாகும் மனிதநேயப் பண்புகளை விவரி.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.

47. அ) "விண்வேறு விண்வெளியில்" – எனத் துவங்கும் இதில் வெற்றிபெற பாடல்.

ஆ) பொருள் என முடியும் குறள்.